# ஆர்.அபிலாஷ்-ன் 'கால்கள்' புதினத்தில் பாத்திரப்படைப்பு

**S. சேவியர்**
முனைவர்பட்ட ஆய்வாளர், முதுகலை & தமிழாய்வுத்துறை,
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி - 620020, தமிழ்நாடு, இந்தியா.

**முனைவர் மு. சாதிக்பாட்சா**
இணைப்பேராசிரியர், முதுகலை & தமிழாய்வுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி - 620020, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம்**

ஆர். அபிலாஷ் அவர்களின் கால்கள் என்ற புதினத்தில் வரும் பாத்திரங்களின் தன்மைகள் ஆசிரியரின் படைப்பாற்றல் வழியாக வெளிக்கொணரப்படுகின்றன. ஒரு தலைமைக் கதாபாத்திரமும், 8 துணைக் கதாபாத்திரங்களும் இக்கட்டுரையின் வழியாக எடுத்துரைக்கப் படுகின்றன. ஏறத்தாழ கதையின் ஒட்டுமொத்தத் தன்மையும் கதாபாத்திரங்களில் அடங்குவதால் கதாபாத்திரங்களை எடுத்துக்கூற வேண்டியது ஆய்வுக்கு முதன்மையான காரணமாகும். எனவே கதாபாத்திரங்களை இக்கட்டுரை வெளிக்கொணருகிறது.

**கலைச்சொற்கள்**

மாற்றுத்திறனாளிகள் - மருத்துவ முறைகள் - இருசக்கர வாகனம் - உபரி சக்கரங்கள் - ஓட்டுநர் உரிமம் - இடதுசாரி - வலதுசாரி - கம்யூனிசம் - ஸ்டிரைக் - தேர்தல் - கலாட்டா - கருத்தியல்.

**முன்னுரை**

'பாத்திரங்கள்' கதையின் அங்கமாக விளங்குகின்றன. உயிர் இயங்குவதற்கு உடல் தேவை என்பதைப் போல கதை நகர்விற்குப் பாத்திரங்கள் இன்றியமையாதனவாக அமைகின்றன. ஒரு கதையை யார் வேண்டுமானாலும் எளிதாகக் கற்பனை செய்துவிட முடியும். ஆனால் அக்கதையின் தன்மைக்கு ஏற்றாற்போலப் பாத்திரங்களைப் படைத்துக் காட்டுவதில்தான் அவ்விலக்கியத்தின் வெற்றியும் ஆசிரியரின் வெற்றியும் அடங்குகிறது.

பாத்திரங்கள் கதையோடு ஒன்றிப்போகும் வண்ணம் அமைப்பது இரசனைக்குரிய ஒன்று. ஆசிரியர் கதையின் மண் சார்ந்த வட்டார வழக்குகளை மிகச் சரியாகப் பயன்படுத்தலே அதன் சாராசம்சமாக விளங்குகின்றது எனலாம். வட்டார வழக்குகள் ஒரு பாத்திரத்தின் எதார்த்தத்தைப் பிரதிபலிக்கச் செய்கின்றன. இப்புதினம் நாஞ்சில் வட்டாரம் சார்ந்து இருப்பதால் அவ்விடத்திற்குரிய பேச்சு வழக்கினைக் கொண்டதாகக் கதையோடு ஒன்றிப்போகும் அளவிற்கு எதார்த்தமாக ஆர்.அபிலாஷ் பாத்திரங்களைப் படைத்துக் காட்டியுள்ளார்.

**பாத்திரப்படைப்பு**

**I. தலைமை மாந்தர்**

**1. மது**

இப்புதினத்தின் தலைமை மாந்தர், மது என்றழைக்கப்படும் மதுக்ஷரா ஆவாள். 'கால்கள்' என்ற தலைப்பிற்குத் தகுந்தவாறு இவள் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டவள். மாற்றுத்திறனாளிகளின் வாழ்வியலை இப்பாத்திரம் பிரதிபலிக்கச் செய்கிறது. சாதாரண மனிதர்களுக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கும் இடையே இருக்கும் பொதுவான வேறுபாடுகள் குறையாதவாறு இப்பாத்திரம் அமைந்துள்ளது. இங்கு

வேறுபாடுகள் என்பது உடலளவில் மட்டுமின்றி மனதளவில் பார்க்கப்படுகிறது. ஒரு செயலைச் செய்யும்போது ஊனமுற்றோர் தங்களுடைய உடல்நிலைக்குத் தக்கவாறு சிந்திப்பதை இப்பாத்திரம் புலப்படுத்துகிறது.

மாற்றுத்திறனாளிகளால் இயல்பானவர்களைப் போன்று தாராளமாகத் தான் நினைக்கும் இடத்திற்குச் சென்று வர இயலாது. அப்படிச் சென்று வரலாம் என்றாலும் உடல் அதற்கு ஒத்துழைப்பதில்லை. இதனால் அவர்கள், உடலிற்கும் மனதிற்குமான போராட்டத்தைச் சந்திக்க நேரிடலாம். இவ்வாறு அதிக நேரம் அல்லது அவர்கள் நினைக்கும் நேரமளவு வெளியே இருக்க முடியாது என்ற அடிப்படைக்குத் தகுந்தவாறு மது அதிக பட்சம் வீட்டிலேயே அவளுடைய நேரத்தைக் கழிப்பவளாக இருக்கிறாள்.

**"வீட்டில் புத்தகம் படித்துப் பகற் கனவு கண்டு தூங்கி கழிக்க பிடித்திருந்தது."[1]**

என்றவாறு அவளுடைய அதிகபட்சப் பொழுதுபோக்காகப் புத்தகங்கள் வாசிப்பதை இயல்பாகக் கொண்டிருப்பவள்.

அவள் பி.ஏ. ஆங்கிலம் முதலாமாண்டு படிக்கின்றாள். அதனால் அவளுடைய வாசிப்பில் ஆங்கில இலக்கியங்கள் இடம்பெறுகின்றன. ஒரு பெண் தன்னை அழகுபடுத்திக்கொள்வது ஆணடிமைத்தனம் என்று கருதுபவள்.

**"அழகுபடுத்துவது ஆணடிமைத்தனத்தின் வெளிப்பாடு. அது மட்டுமல்ல, உடல் அழகு அத்தனை முக்கியமும் அல்ல" என்று அவள் கண்ணாடியைப் பார்த்த படி அடிக்கடி கூறிக் கொண்டாள். சற்று காலத்தில் இது அடிமனதில் கால்வாசி வேர் பதித்துக் கொண்டது. பவுடர் பூசுவது, லிப்ஸ்டிக் தேய்ப்பது என்ன தலை சீவுவதுகூட ஒரு கலாச்சார சீரழிவு என்று ஒரு நாள் பயிற்சியின்போது கார்த்திக்கிடம் விவாதித்தாள்."[2]**

என்பது இயல்புக்கு மாறான வேறுபட்ட சிந்தனையைக் காட்டுகிறது. அழகுபடுத்திக் கொள்வது என்பது அவரவர் விருப்பம் என்றிருக்க மதுவின் சிந்தனை மற்ற மனிதரிடமிருந்து அவளை வேறுபடுத்திக் காட்டுகிறது. இது அவளுடைய பெண்ணியச் சிந்தனையைக் குறிக்கின்றது. சமுதாயத்தைப் பார்க்கும் பார்வையில் மதுவிற்கு எது சரி என்று படுகின்றதோ அதை நியாயப்படுத்தும் குணம் கொண்டவளாக இருக்கின்றாள்.

மதுவின் கல்லூரிப் பேராசிரியர் மதுசூதனனின் மகன் பாலு மன அழுத்தம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தான். அங்கு அவனைப் பைத்தியம் என்று நம்பினர். பேராசிரியரின் குடும்பத்தினர் கூட அதை நம்பினர். ஆனால் மது அதை வேறொரு கண்ணோட்டத்தில் பார்க்கின்றாள்.

**"ஒரு மனிதனை எவ்வளவு எளிதில் பைத்தியம் என்று ஒன்றும் அற்றவனாக உரிமைகள் இழந்தவனாக விளிம்புக்கு தள்ளிவிடுகிறார்கள். அவனது ஆன்மாவுக்கு, ஆளுமைக்கு அவ்வளவுதான் மதிப்பா? பாலுவை இப்படி முத்திரை குத்த இவர்கள் யார்? அவனைப் பற்றி ஒன்றுமே தெரியாத எந்த அக்கறையுமே கொள்ளாத இவர்களுக்கு இப்படியெல்லாம் அவனை அடையாளப்படுத்த யார் உரிமை அளித்தது?"[3]**

என்று தனக்குள் பல கேள்விகளைக் கேட்டுக்கொள்கிறாள். சமுதாயம் சீரான பாதையில் செல்லாத பொழுது ஒரு தனிமனிதனுக்கு ஏற்படும் இயல்பான வெறுப்புகள் மதுவிற்கு ஏற்படுவதை இங்கு பார்க்க முடிகிறது.

ஒருமுறை மதுவின் நண்பனாகிய கார்த்திக் தன் வாழ்வில் நடப்பதை அவளுடன் பகிர்ந்துகொண்டிருக்கும்போது,

**"கார்த்திக் நீ தப்பா நினைக்காட்டி ஒண்ணு சொல்றேன். ஒரு பக்கம் நீயாத்தான் உன் வாழ்க்கையை அழிச்சிக்கிறே. நீயா தான் அதை விரும்பி செய்யுற. இந்த ஸ்டிரைக், கலாட்டா, தேர்தல், சண்டை இதுக்கும்**

**உனக்கும் எந்த தொடர்பும் இல்லை. நீ உம் பாட்டுக்கு காலேஜ் போயிட்டு வர வேண்டியது தானே. என்னோட சின்ன அறிவுக்கு இதுதான் தோணுது"[4]**

என்கிறாள். அதற்கு கார்த்திக்,

**"ஒருத்தர் அப்பிடி வெலகி நிற்க முடியாது. எதுக்குமே நான் காரணம் இல்லை. நான் ரிக்ரெட் பண்ணப் போறதும் இல்லை. நடக்குறது நடந்து தான் தீரும்."[5]**

என்று தன் பக்கத்தில் இருக்கும் நியாயத்தை மதுவிடம் கூறுகிறான். ஆனால் மது,

**"இது மூடத்தனம், நான் ஒத்துக்க மாட்டேன். என் வாழ்க்கையை என்னால் தீர்மானிக்க முடியும். உன் வாழ்க்கையை உன்னாலயும். சும்மா விதி கடவுள்னு பொறுப்பைத் தள்ளிப்போடக் கூடாது."[6]**

என்கிறாள். இது நம் வாழ்வில் நடப்பவை அனைத்தும் நம்மால் மட்டுமே நிகழ்கிறது என்ற கொள்கையை முன்வைப்பதாகும். விதி மீது பழிபோடுபவர்களுக்கு இது ஏமாற்றத்தை அழிக்கக் கூடியதாக உள்ளது. மது, ஒரு மனிதனின் வாழ்வு அவராலேயே தீர்மானிக்கப்படுகிறது என்கின்றாள். இது மதுவிற்கு இருக்கும் வாழ்வியல் எதார்த்தத்தைப் புலப்படுத்துகிறது.

மது வண்டி ஓட்டிப் பழகும்போது கீழே விழுந்து அடிபடுகிறது. இருப்பினும் அதற்காக அவள் பயப்படாமல் மறுநாளே மீண்டும் ஓட்ட வேண்டும் என்ற எண்ணம் அவளுள் தோன்றுகின்றது. அவளது அப்பாவின் கோபத்தை அவள் பொருட்படுத்தவில்லை. அவர் கோபப்படுவதன் காரணம், மகள் மீதான பாசம் என்பது ஒருபுறம் இருந்தாலும் மது விபத்தைக் குறித்துத் துவண்டுவிடவில்லை. அவள்,

**"ஊர் உலகில் எத்தனையோ விபத்துக்கள் நேர்கின்றன? ஏன் அவருக்குக் கூட விபத்து நடக்கலாம். அதனால் அவர் வண்டி ஓட்டாமல் இருக்கப் போகிறாரா?"[7]**

என்று தன்னம்பிக்கையுடன் வண்டி ஓட்டிப் பழகுவதற்கு முயற்சி செய்கிறாள். இறுதியில் தன்னுடைய உபரி சக்கரங்கள் பொருத்தப்பட்ட வாகனத்திற்கென்று தனியாக ஓட்டுநர் உரிமமும் பெற்றுவிடுகிறாள்.

எனவே ஊனம் என்பது கால்களில் மட்டும்தான் இருக்கிறது. மனதிற்கு இல்லை என்றவாறான இயல்புகளைக் கொண்டுள்ள பாத்திரமாக மது காணப்படுகின்றாள்.

## II. துணைநிலை மாந்தர்

### 1. பிரேமேந்திரன்

பிரேமேந்திரன் மதுவின் தந்தை ஆவார். இவர் வங்கியில் வேலை செய்பவர். தன் மகளின் ஊனத்திற்குக் காரணம் அவர்தான் என்ற ஒரு குற்றவுணர்வு அவருக்கு இருக்கின்றது. இருப்பினும் மகளுக்கான சிகிச்சை முறைகளைப் பின்பற்றுவதில் அவர் தவறுவதில்லை. அதற்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவழிக்கத் தயாராக இருக்கும் அளவுக்கு பாசம் மிகுந்தவராகக் காணப்படுகின்றார்.

மதுவின் குழந்தைப் பருவ சிகிச்சையில் அவளது கால்விரல்கள் அசையத்துவங்கின. அதில் பிரேமேந்திரன் அளவில்லாத மகிழ்ச்சி கொள்கிறார். அதனை,

**"முதல் மூன்று வருட சிகிச்சை விளைவாக அவளது காலின் விரல்கள் அசையத் தொடங்கின. இதை அப்பா எப்போதும்ஒரு பெருமிதத்துடன் குறிப்பிடுவார். அத்துடன் அன்றைய நாள் டாக்டர் குரியன் ஒரு மனிதன் நடக்கும் போது அவனது கால் எப்படியான அசைவுகளை மேற்கொள்கிறது என்பதை விளக்கியதை அவர் மீள்புனைவு செய்து அபிநயித்துக் காட்டுவார்."[8]**

என்ற வரிகளின் மூலம் அறியலாம்.

பிரேமேந்திரன் ஒருவரிடம் மதுவைப்பற்றிப் பேசும்போது,

**"அவரை மீண்டும் பாதி வழியில் தடுத்த அப்பா மதுவின் சிகிச்சைக்காகத்தான் தனது இளமைக்காலத்தை முழுக்க வைத்திய சாலைகளில் கழித்த துயரத்தை, கசப்பை**

**சொன்னார். "ராத்திரி எல்லாம் தூங்காம இவ அழுவுறத கேட்டுக்கிட்டு படுத்திருப்பேன். ராத்திரி ரெண்டு மணிக்கெல்லாம் முதுகில தூக்கிப் போட்டு வராந்தாவில நடப்பேன், திடீர்னு கொல்லாம்பழம் வேணும்னு ஒரு நாள் ராத்திரி மூணு மணிக்கு கேட்டான்னு விடிகாலையில மார்க்கெட் போய் நின்னு வாங்கி வந்து தூங்கி இவ முளிச்சதும் கொடுத்தேன்."[9]**

என்றார். இ.எம்.எஸ். என்பவரிடம் பேசும்போது,

**"அவளைத் தேத்தி இவ்வளவு தூரம் கொண்டு வந்தது நான் பட்ட பாடுதான். இந்த கையில தூக்கிக்கிட்டு எவ்வளவு தூரம் இவளுக்காக ஓடியிருக்கேன். கீழே வைக்காம பாடிப் பாடி தூங்க வச்சிருக்கேன்" அப்பாவின் குரல் கம்மியது கண்களில் நீர் எட்டிப் பார்த்தது."[10]**

என்று அழுதுகொண்டே மதுவின் மீதுள்ள பாசத்தை வெளிப்படுத்துகிறார். இப்படி மதுவின் மீது அதீத அன்பைக் கொண்டுள்ள பிரேமேந்திரனுக்கு அவளது நிலையை ஏற்றுக்கொள்ளாமல் ஒரு குடிகாரராக மாறுகின்றார். இது அவருடைய இயலாமையைக் காட்டுகிறது. தவிர்க்க முடியாத பிரச்சினை வரும் போது அதை ஏற்க மறுக்கும் தன்மை அவரிடம் காணப்படுகிறது.

எம்.ஜி.ஆர் மற்றும் ரஜினியின் தத்துவப் பாடல்களைப் பாடிக்கொண்டும், குடித்துக் கொண்டும் ஒரு நடுத்தர மக்களின் வீடுகளில் இருக்கும் ஒருவராகப் பிரேமேந்திரன் உள்ளார். "எம்.ஜி.ஆரின் வில் பவர் இருந்தாலே அவள் நடக்க ஆரம்பித்து விடுவாள்" என்று சினிமாக் கதைகளை நிஜமாக்க முயற்சிகளை மேற்கொள்ளக் கூடியவராக இருக்கின்றார்.

## 2. விசாலம்

மதுவின் தாய் விசாலாம் ஆவாள். மதுவிற்கு தந்தை ஒரு கால் என்றால் தாய் மற்றொரு காலாக இருக்கின்றாள். மகளின் மீது பாசம் கொண்டு அவளைப் பராமரிக்கின்றாள். ஒரு தாய் தன் மகளின் நிலையை அறிந்து என்னனென்ன செய்ய இயலுமோ அவற்றையெல்லாம் மதுவிற்கு விசாலம் செய்கின்றாள்.

**"அம்மா வந்து வெந்நீரால் முகம் துடைத்து விட்டாள். கண்களை அழுத்தி துடைத்த போது வலித்தது. அம்மாவுக்குத் திருப்தி வராமல் மீண்டும் மீண்டும் துணியைப் பிழிந்து துடைத்தாள். நெற்றி வியர்வை பருக்கள் மீது அழுத்தியபோது மது போதும் என்றாள். உலர்ந்த துணியால் துடைத்து அம்மாவுக்குப் பிரியமான அவள் மட்டும் வீட்டில் உபயோகிக்கும் குட்டிக்கூரா பவுடர் போட்டு விட்டாள்."[11]**

என்ற வரிகளில் ஒரு தாய் மகளுக்கு ஆற்றும் கடமைகள் வெளிப்படுகின்றன. ஆகவே விசாலம் மதுவின் மீது அதீத அன்பு கொண்டிருக்கின்றாள் என்பது விளங்குகிறது.

மருத்துவ முறைகள் பல பின்பற்றப்படினும் விசாலம் தெய்வ நம்பிக்கையையும் பின்பற்றினாள். கிரக பெயர்ச்சிகள், கோவிலில் பூஜை வேலைகள் போன்ற எந்தவொரு ஆன்மீக நிகழ்வுகளையும் அவள் விட்டுவிடுவதில்லை. இதனை,

**"அம்மா பல சமயங்களில் கடவுள் முன் உருகிப்போய் நேரம் செல்வதை மறந்து விடுவாள். தனது துர்பாக்கிய நிலைமை குறித்து என்றும் கடவுளிடம் வேண்டத்தான் செய்வாள். தனக்கு வேண்டியவர்களுக்கு நல்லது பண்ணுமாறு கடவுளிடம் சத்தமாய் முணுமுணுப்பதைப் பார்த்திருக்கிறாள்"[12]**

என்பதால் அறியலாம்.

விசாலம் தன் வாழ்க்கையில் கடமையைச் சரியாகச் செய்யக்கூடியவள். 'கணவனே கண்கண்ட தெய்வம்' என்பதற்கிணங்க, பிரேமேந்திரன் குடித்துவிட்டு செய்யும் காரியங்களுக்கெல்லாம் விசலாம் மௌனமாக சாதிப்பாள். ஒரு மனைவியாகத் தான் என்ன செய்யவேண்டும் என்பதில் அவள் பொறுப்பு மிகுந்தவளாக இருக்கின்றாள். இது குடும்பத்தை சமனிலையில் (Balance) வைத்திருக்க உதவும் பண்பாகும்.

பிரேமேந்திரன் ஒரு முறை குடித்துவிட்டு வந்து வழக்கம்போல் வீட்டில் பிரச்சினை செய்ய ஆரம்பித்தார். அன்று வைத்தியர் ஊருக்குப் போயிருப்பதால் அவருக்கு அது வசதியாய் இருந்தது. தெருவில் வருவோர் போவோர்களின் ஒழுக்க நிலைகளை விமர்சித்தல், திட்டுதல் போன்ற பல ஆர்ப்பாட்டங்கள் செய்துகொண்டிருந்தார். இதனை,

> **“வழக்கத்தைவிட அதிக போதையில் இருந்ததால் வராந்தாவில் இருந்து வாசற்படிக்கட்டுக்கு முன்னேறி அங்கேயே படுத்துக் கத்தினார், பாடினார், புலம்பினார், திட்டினார், சில சமயம் இத்தனையும் சேர்த்து ஒன்றாகச் செய்தார். தெருவில் தெரிந்தவர்கள் போனால் அழைத்து அவர்களின் ஒழுக்கக்கேட்டை விமர்சித்தார், கிண்டலடித்தார், புகார் கூறினார்.”[13]**

என்ற வரிகளினால் அறியலாம். ஆனால் விசாலம் அதற்கு எந்தவொரு எதிர்ப்பும் காட்டாமல் அதற்கு மாறாக ஒரு குடும்பப்பெண்ணாகத் தன் நிலையை உணர்ந்து நடந்துகொண்டாள்.

> **“தனது இயலாமையை நினைத்து அவர் தளர்ந்து கொண்டிருக்கும்போது அம்மா மிகவும் சிரமப்பட்டு அவரை இழுத்து வராந்தாவில் கிடத்தினாள். அப்படி இழுக்கும்போது அம்மா அவரை ஒரு பாரமான பொருள் என்றே நினைத்திருப்பாள் என்று ஊகித்தாள். பொதுவாக அப்பாவிடம் அளவுக்கதிகமான மரியாதை காட்டும் அம்மா அப்போது அவரை அவ்வளவு அசட்டையுடன் தரதரவென இழுத்தாள்.”[14]**

என்ற வரிகளில் விசாலம் பிரேமேந்திரன் மீது வெறுப்புணர்வு கொண்டிருந்தாலும் ஒரு மனைவியாய் தன் கடமையைச் செய்வதிலிருந்து தவறவில்லை.

### 3. சேர்த்தலம்

சேர்த்தலம் ஒரு வைத்தியர். மதுவின் கால்களுக்கு இயற்கை முறையில் சிகிச்சையளிக்கப் பிரேமேந்திரனால் நியமிக்கப்பட்டவர். இவர் பல்வேறு விதங்களில் மதுவிற்கு சிகிச்சையளிக்கின்றார். இவர் கற்றுவைத்த சிகிச்சை முறைகளைப் பின்பற்றி மதுவிற்கு உபயோகப்படுத்துவதுடன் கேரளா சென்று அங்கிருந்தும் இயற்கை மருத்துவ முறையைத் தெரிந்துகொண்டு வந்து அதனையும் முயற்சி செய்து பார்க்கின்றார். மதுவிடம் அவள் தந்தையைப் போன்ற அன்பைக் காட்டக் கூடியவராகவும் இருக்கின்றார்.

மதுவிற்கு வாங்கிய வண்டி உபரி சக்கரங்கள் பொருத்துவதற்காக மெக்கானிக் கண்ணனிடம் கொடுக்கப்பட்டிருந்தது. இதனை அறிந்த வைத்தியர், உபரி சக்கரங்கள் வேண்டாம் என்று பிரேமேந்திரனிடம் பேசினார். அப்போது,

> **“கேளுங்க பிரேமேந்திரா அந்த நல்லொரு வண்டியை ஏன் பாழ் பண்ணுறீங்க? அதை அப்பிடியே மதுவுக்கு ஓட்டக்கொடுக்கலாமே.”**
>
> **“இப்பிடி ஒரு வண்டியை செயற்கையா மாத்தி இன்னொண்ணா பண்ணுறத கேடாக்கும் கேட்டீங்களா. கொளந்தைக்குப் பின்னாடி ஏதாவது சொகக்கேடு வரும். ஸ்கூட்டர் ஸ்கூட்டர்தான், ஆட்டோ ஆட்டோதான், காரு காருதான். ஸ்கூட்டர ஆட்டோவா மாத்தக்கூடாது எல்லாத்துக்கும் ஒரு நியதி ஒண்டுல்லா.”[15]**
>
> **“நாளைக்கே நம்ம பிள்ளெ நடக்கத் தொடங்கினா அவளுக்குப் பெறவு நாலுகால் வண்டிதான் ஓட்ட வரும். ரெண்டு சக்கர வண்டி ஓட்டத் தெரியாம போயிடும்.”[16]**

என்றார். இதிலிருந்து வைத்தியர் தன் வேலை சிகிச்சையளிப்பது என்பதைக் கடந்து மதுவின் குடும்பத்தோடு ஒன்றிப்போவதைக் காணலாம். உபரி சக்கரங்கள் பொருத்துவதென்பது மதுவால் நடக்க முடியாது என்பதைக் காட்டுகின்றது. ஆனால் வைத்தியரோ அதை மறுத்து மதுவின் மீது நம்பிக்கை கொண்டுள்ளப் பாத்திரமாகக் காணப்படுகின்றார்.

4. **கார்த்திக்**

கார்த்திக் ஆர்.எஸ்.எஸ். மற்றும் கம்யூனிசம் ஆகிய இரண்டிலும் நாட்டமுடையவனாக இருக்கின்றான். பக்தியுடனும் சில நேரங்களில் பக்தியற்ற நிலையிலும் இருப்பவன். மதுவின் தோழன். அவளை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதிலும், கல்லூரிக்குச் செல்வதிலும் துணையாக இருக்கின்றான். இவனுடைய தந்தை காணாமல் போய்விட்டார். எனவே வீட்டில் வறுமை நிலைத்திருக்கின்றது. அதை வெளிக்காட்டியும் மறைத்தும் மதுவிடம் பழகிக்கொண்டிருக்கக் கூடியவன்.

மதுவிற்கு வண்டியைப் ஓட்டுவதற்குப் பயிற்சியளிக்கப் பிரேமேந்திரன் கார்த்திக்கை நியமித்திருந்தார். அதற்கு அவர் பணம் தருவதையும் தவிர்க்கவில்லை. இருப்பினும் வண்டியிலிருந்து இருவரும் கீழே விழுந்து அடிபட்டதால் பிரேமேந்திரன் கார்த்திக்கை நிறுத்திவிட்டார். கார்த்திக் கல்லூரியில் தேர்தல், ஸ்டிரைக் போன்ற படிப்புக்கும் செயலுக்கும் சம்பந்தமில்லாத விஷயங்களில் தலையிடக் கூடியவனா இருக்கின்றான். அதனால் மது அவனுக்கு அவன் நிலையை உணர்த்தும் போது,

**"கார்த்திக் நீ தப்பா நினைக்காட்டி ஒண்ணு சொல்றேன். ஒரு பக்கம் நீயாத்தான் உன் வாழ்க்கையை அழிச்சிக்கிறே. நீயா தான் அதை விரும்பி செய்யுற. இந்த ஸ்டிரைக், கலாட்டா, தேர்தல், சண்டை இதுக்கும் உனக்கும் எந்த தொடர்பும் இல்லை. நீ உம் பாட்டுக்கு காலேஜ் போயிட்டு வர வேண்டியது தானே. என்னோட சின்ன அறிவுக்கு இதுதான் தோணுது"**[17]

என்கிறாள். எனவே கார்த்திக் மேற்கண்டவாறான பாதையில் செல்லும் சாமானிய இளைஞனாக இருக்கின்றான்.

5. **இ.எம்.எஸ்.**

இ.எம்.எஸ். மதுவின் நண்பர். இவரது பெயர் ரவீந்திரன் அல்லது ஸ்ரீதரனாக இருக்கலாம். இவர் ஊருக்குள் ஒரு இடதுசாரி பிரமுகர். கருத்தியலை நம்பக்கூடிய ஒரு அரசியல்வாதியாக இருப்பவர். பிரச்சனைகளைகட கருத்தியலின் வழியாகத் தீர்க்கலாம் என்றிருப்பவர். இவர் பேசும் கருத்துக்கள் பெரும்பாலான மக்களுக்கு விளங்குவதில்லை. இருப்பினும் அவர் அதனைப் பொருட்படுத்திக்கொள்வதில்லை.

மதுவிற்கு இவர் நண்பராக இருந்தாலும், பிரேமேந்திரன் இவர்மீது வெறுப்புற்றிருந்தார். அதற்குக் காரணம் பிரேமேந்திரனின் அரசியல் பற்று எனலாம்.

**"ஆசன வாயில முடி முளைக்காதவன் ஆம்பிளை இல்லை. அப்புறம் இவன் என்ன தலைவன். எம்.ஜி.ஆர்.தான் அசலான மேனன். அவருக்கு முடி இருந்தது. நீ என்ன புடுங்கிட்டே"**[18]

என்று பிரேமேந்திரன் அவரிடம் ஒரு முறை நேரடியாகக் கேட்டார். அதற்கு குக் எவரெஸ்டு மதுவின் அப்பாவிடம் சீறியபோது அவரைத் தடுத்து,

**"அண்ணன் ரெட்டை இலை இல்லையா. பின்ன எப்படி? அவன் அவனுக்கு அவன் அவன் கவலை."**[19]

என்று இ.எம்.எஸ். சாந்தமாகப் பதிலளித்துவிட்டார். இவ்வாறு பல பிரச்சினைகளை அவர் சந்தித்தாலும் தாம் ஊர்ப் பெரியவர் என்ற முறையில் பிரச்சினையிலிருந்து விலகியோ சந்தித்தோ அதைக் கடந்துசெல்லக் கூடியவராக இருக்கின்றார்.

6. **குக் எவரெஸ்ட்**

இவர் மதுவின் நண்பர். இவரது உண்மையான பெயர் சுகுணன். சமையலில் நிபுணத்துவம் பெற்றவர். ஒரு முறை இவர் இரண்டு கல்யாண சாப்பாடுகளைச் செய்துகாட்டிச் சாதனை படைத்தவர். அதனால் இவருக்கு குக் எவரெஸ்ட் என்று பெயரிடப்பட்டது.

**"இந்த நாட்டுல குக் எவரெஸ்டு இல்லாம ஒரு கல்யாண பந்தி நடக்குமா சொல்லுடே"**[20]

என்னும் வாதாடும் அளவிற்கு தன்னம்பிக்கையும் தைரியமும் கொண்டவர்.

குக் எவரெஸ்டும் இ.எம்.எஸ்-ம் நல்ல நண்பர்கள். அதில் ஆச்சரியப்படக்கூடிய ஒன்று என்னவெனில் இருவரும் இரு துருவங்கள் போன்றவர்கள். இ.எம்.எஸ். இடதுசாரி என்றால், குக் எவரெஸ்ட் வலதுசாரி ஆவார். இருப்பினும் இ.எம்.எஸ். போன்று கருத்தியலை நம்பாமல் அதாவது தர்க்கத்தை ஏற்காமல் உணர்வுப்பூர்வமாகவே பேசுவார். வெறுப்பும் அன்பும்தான் அவருடைய நிலைப்பாடுகளாக உள்ளன.

மது இ.எம்.எஸ்ஸிடம் ஒரு முறை நீங்கள் இடதுசாரியாக இருக்கும்போது ஒரு வலதுசாரியிடம் நண்பராக இருக்க எப்படி முடிந்தது என்று வினவினாள். அதற்கு இ.எம்.எஸ்.,

> **"இவன் வலதுசாரியும் இல்லை, ஒரு எளவும் இல்லை. அப்படீன்னா என்னன்னு கேட்பாம் பாருங்க. விடிய காலை காக்கி நிக்கர போட்டுட்டு குஸ்தி காட்டினா அரசியலாவாது பிள்ளே."**[21]

என்றார்.

குக் எவரெஸ்டு, இ.எம்.எஸ். பற்றி தாம் கொண்டுள்ள கருத்து வேறுபாட்டை மதுவிடம் சொல்லும்போது,

> **"இவன் லோகமகா கள்ளன் இல்லா. நேத்து பாகிஸ்தான் பத்தி இவன் பேசினது கேட்டா யாரு கம்யூனிஸ்டுன்னு எனக்கே கொளப்பமா போச்சு கேட்டியளா. இவன் தோப்புல கெளைக்க வந்த தொழிலாளிங்ககிட்ட குத்தம் குறைவு சொல்லி பாதிக் கூலிய திரும்ப புடுங்கீருவான்."**[22]

என்றார். இவ்வாறு இருவருக்கும் அவரவர் சார்ந்துள்ள அரசியல் பின்புலத்தின் காரணமாகக் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் இருவரும் நண்பர்களாகவே உள்ளனர்.

**7. மதுசூதனன்**

மதுவின் கல்லூரிப் பேராசிரியர். இவர் ஒரு பெரிய பண்ணையார் ஆவார். இவருக்கு இரண்டு மகன்களும் ஒரு மகளும் உள்ளனர். மதுசூதனனின் வகுப்புகள் மதுவிற்குப் பயனுள்ளதாக இருக்கும். மனிதனின் வாழ்க்கையைக் குறித்து உளவியல் ரீதியிலான விளக்கங்களை அளிப்பவர்.

> **"வயதாக ஆக வாழ்வின் அனுபவங்கள் நம்மைச் சுற்றி ஒரு சுவர் எழுப்ப வைக்கின்றன. தூர்வாரப்படாத ஒரு குளம் போல் ஆகின்றன இளமையில் நாம் நாலாப்பக்கமும் திறந்த படி விழிப்பாக இருப்பது இயல்பாகவே நடக்கிறது. இதைப் பிற்பாடு வயதான பின் தக்க வைப்பதுதான் சவால்."**[23]

என்று அவர் கூறுவதால் இவர் தத்துவம் மற்றும் உளவியலில் ஆர்வம் கொண்டவராகக் காணப்படுகின்றார்.

தன் இரண்டாவது மகன் பாலுவின் உடல் நிலை சரியில்லாத பொழுதும் மனம் தளராமல் நம்பிக்கையுடன் இருந்தார். அப்போதும் அவர் முகத்தில் இயல்பான புன்னகை இருந்தது. இது அவரது எதார்த்தத்தைக் காட்டுகிறது. இதனை,

> **"பேராசிரியரின் தோற்றத்தை அப்போதுதான் முழுமையாக கவனித்தாள். மடிப்பு கலையாத இளநீல சட்டை, காட்டன் பேண்ட், சீராக வாரிய தலை, ஞானி தாடி, எப்போது வேண்டுமெனினும் புன்னகை அரும்பலாம் எனும் உதடுகள், தாழ்ந்து நோக்கும் அன்பான கண்கள். பேராசிரியர் வழக்கம்போல் தோன்றினார் என்பதைவிட அவர் ஏன் அப்படியே இருக்கிறார் என்றுதான் மது வியந்துகொண்டாள்."**[24]

என்ற வரிகளின் மூலம் அறியலாம். இது நம் வாழ்நாளில் வரும் பிரச்சினைகளை அணுகும் முறைகளைக் காட்டுகிறது. பதறாத காரியம் சிதறாது என்ற பழமொழிகளுக்கேற்ப பேராசிரியர் மதுசூதனன் எதார்த்தமாகத் தனக்கு வரும்

பிரச்சனைகளை அணுகக் கூடியவராக இருக்கின்றார்.

**"ஒரு பெரிய பிரச்சினைக்கு உள்ளே இருக்கும் போது நமக்கு அவ்வளவு எளிதா விடைகள் தெரியாது. என்ன செய்யணும்கிறதுல குழப்பம் இருக்கும். அதனால தான் வாழ்க்கையோட ரொம்ப முக்கியமான முடிவுகளை பல பேர் ஒர அவசரத்துல அனிச்சையா எடுத்திருக்காங்க. அதுக்கு மேல வாழ்க்கை அல்லது கடவுள் அல்லது விதி, நீ எப்பிடி வேணும்னாலும் வச்சுக்கோ, நமக்கு அவகாசம் தரதில்லை."[25]**

என்று அவர் வாழ்வு குறித்த எதார்த்த நிலைகளை மதுவிற்கு விளக்குகின்றார்.

**8. கண்ணன்**

கண்ணன் ஒரு மெக்கானிக். மதுவிற்கு இரு சக்கர வாகனம் வாங்கி அதில் உபரிச் சக்கரங்கள் பொருத்துவதற்குப் பிரேமேந்திரன் கண்ணனிடம் கொடுத்தார். ஆரம்பத்தில் அந்த வேலை முடிந்தபாடில்லை. வண்டி சென்னைக்குக் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது என்று காலம் தாழ்த்திக்கொண்டிருந்தான். சிறிது நாட்களில் வண்டியைக் கண்ணன் விற்றுவிட்டதாகப் பிரேமேந்திரன் எண்ணினார்.

**"கண்ணன் வந்து போய் மேலும் இரண்டு வாரங்களுக்கு வண்டி குறித்து எந்த தகவலும் இல்லை. வண்டியை கண்ணன் சென்னைக்கு அனுப்பி விற்றதாக அப்பா தொடர்ந்து அவனை வசை பாடிக்கொண்டு இருந்தார்."[26]**

**"அந்த தாயோளி வண்டிய களவாண்டதுகூட போட்டும். ஆனா காலு வெளங்காத ஒரு பொண்ணோட வண்டியில்லா அது. அதை ஏமாத்துறது பாவமில்லா? அதை அவன் யோசிச்சிருக்கணும்"[27]**

என்ற வரிகள் பிரேமேந்திரன் கண்ணன் மீது வைத்திருந்த அவநம்பிக்கையைக் காட்டுகின்றன. ஆனால் கண்ணன் வண்டியை சீர்செய்து சக்கரங்கள் பொருத்தி மதுவின் வீட்டிற்குக் கொண்டுவந்து கொடுத்தான். பிரேமேந்திரன் கண்ணனை மதுவிற்கு வண்டி ஓட்டுவதற்குப் பயிற்சியாளராக நியமித்தார். மது ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு கண்ணன் வழிகாட்டியாக இருந்து அவளுக்கு உதவுகின்றான்.

மேற்கண்டவாறு இப்புதினத்தின் பாத்திரங்கள் பல்வேறு தன்மைகளைக் கொண்டதாய் அமைகின்றன. இதர பாத்திரங்கள் புதினத்தின் நடுவே வந்துபோகின்றன. இருப்பினும் இங்கு குறிப்பிட்ட, இன்றியமையாத பாத்திரங்களின் படைப்புத்தன்மை மட்டுமே எடுத்துக்கொள்ளப்பட்டது.

## தொகுப்புரை

- மாற்றுத்திறனாளிகளின் வாழ்வியல் நிலைகள் 'மது' என்னும் தலைமைப் பாத்திரத்தின் வழி அறிந்துகொள்ளப்படுகின்றது. மனிதன் தன் கால்களை இழந்தால், அவன் தன் இயக்கத்திற்குப் படும் சிரமங்களையும், பிறர் தம்மை அணுகும் முறைகளையும் இப்பாத்திரம் வெளிப்படுத்துகின்றது.
- மதுக்ஷராவின் பெற்றோர்கள் அவளுக்குத் தகுந்தவாறு தங்களை மாற்றிக்கொண்டு வாழும் வாழ்வு சமுதாயத்தாருக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. பிரேமேந்திரன் மற்றும் விசாலம் ஆகியோரின் படைப்பை ஆராயுமிடத்து, அவர்கள் மகளின் வாழ்க்கைக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட திறம் புலப்படுகின்றது.
- வைத்தியர் சேர்த்தலமும் தன் கடமையில் துளியும் மாறாதவராக இருக்கின்றார். தான் கற்று வைத்திருந்த மருத்துவ முறைகளைக் கொண்டு மதுவிற்குச் சிகிச்சை அளிப்பதோடு மட்டுமல்லாமல் கேரளா சென்று அங்கு பின்பற்றப்படும் சிகிச்சை முறைகளையும் அறிந்து வருபவராகவும் இருக்கும் திறம் படைத்தவர் என்பது அவருடைய பாத்திரப்படைப்பின் வழி அறியப்படுகின்றது.

❖ மதுவிற்கு நெருங்கிய நண்பனான கார்த்திக், அவளுக்கு இருசக்கர வாகனம் ஓட்டப் பயிற்சியளிப்பதும், பின்பு அவன் கல்லூரியில் தேர்தல், ஸ்டிரைக் போன்றவற்றினால் துன்பப்படுதல் எடுத்துரைக்கப்படுகின்றது. அதன் பின் கண்ணன் என்ற மெக்கானிக் மதுவின் வண்டிக்கு உபரிச் சக்கரங்கள் பொருத்துவதும், பயிற்சியளிப்பதும், மேலும் மது தனது வண்டிக்கான ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு முயற்சி செய்வதும் மேற்கண்டவாறு ஆராயப்பட்டுப் புலப்படுத்தப்படுகின்றது.

## முடிவுரை

ஆர். அபிலாஷ்-ன் 'கால்கள்' என்ற புதினத்தில் பாத்திரங்கள் ஆராயப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாத்திரமும் தனக்கானப் படைப்பில் பெற்றுள்ள பல்வேறு தன்மைகள் மேற்கண்டவாறு வெளிப்படுத்தப்படுகின்றன.

## அடிக்குறிப்புகள்

1. ஆர்.அபிலாஷ், கால்கள், பக். 266
2. மேலது ப. 26.
3. மேலது ப. 231.
4. மேலது பக். 444 - 445.
5. மேலது ப. 445.
6. மேலது ப. 445.
7. மேலது ப. 456.
8. மேலது ப. 12.
9. மேலது பக். 491 - 492.
10. மேலது ப. 492.
11. மேலது ப. 359.
12. மேலது ப. 324.
13. மேலது ப. 282.
14. மேலது ப. 282.
15. மேலது ப. 258.
16. மேலது ப. 258.
17. மேலது பக். 444 - 445.
18. மேலது ப. 21.
19. மேலது ப. 21.
20. மேலது ப. 20
21. மேலது ப. 20
22. மேலது ப. 20
23. மேலது ப. 82.
24. மேலது ப. 227.
25. மேலது ப. 464.
26. மேலது ப. 376.
27. மேலது ப. 376.